**அம்பலங்கொட நகர சபை**
**காலி மாவட்டம்**

-----------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 11 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜூன் 16 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜூன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து அம்பலங்கொட நகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2005 ஆண்டின் போது மழை நீர் வடிகால் முறைமை ஒன்று ஒழுங்கு செய்வதற்காக உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடன் ரூபா 12,142,439 தொகை மற்றும் அதற்கான வட்டி ரூபா 10,707,125 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என அறிவிக்கின்றேன். |

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 09 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 3,940,274 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) பிரதான செயலாளரின் CSS/9/2/5 இலக்கங் கொண்ட மற்றும் 2020 பெப்ரவரி 12 திகதிய கடிதத்தின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணத்தின் கீழ் பெறவேண்டிய மீதிகள் முறையே ரூபா 37,991,599 தொகை மற்றும் ரூபா 448,838 தொகையும் மிகையாக காட்டப்பட்டுள்ளது. | மீதிகளை இனங்கண்டு சரி செய்து அறிவிக்க வேண்டும். | கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) 21 வருடங்களை விட மிகையான காலம் முதல் முன் கொண்டு வந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 16,688,128 தொகை பெறவேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதிகளை இனங்கண்டு சரி செய்து அறிவிக்க வேண்டும். | கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 25 வருடங்கள் முதல் முன்கொண்டு வந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 10,645,572 தொகையான செலுத்தவேண்டிய 09 மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதிகளை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

**தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 469,182 தொகைக்கான நிலையான வைப்புக் கணக்கின் மீதி தொடர்பாக தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) நகர சபைக் கட்டளைச் சட்டம் | | | |
| பிரிவு 170(1)(2) | நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீதவரிக்காக நடமாடும் சேவைகள் நடாத்தி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப் பிரமாணம் 395(ஈ) | சபையின் மின்சார வங்கிக் கணக்கு மற்றும் சுற்றாடல் செயற்திட்டக் கணக்குகளுக்காக வங்கி இணக்கக்கூற்றுகள் தயாரித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | நிதிப் பிரமாணங்களின் படி செயற்படுவேன். |
| (ii) நிதிப் பிரமாணம் 571 | 02 வருட காலத்தை மிகைத்துள்ள 39 பலவின வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | நிதிப் பிரமாணங்களின் படி செயற்படுவேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,759,085 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 39.909,490 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 12,375,000 | 20,360,801 | 18,893,201 | 24,625,798 | 14,525,000 | 20,497,155 | 17,444,732 | 23,681,395 |
| வாடகை | 14,466,600 | 11,375,205 | 11,359,818 | 4,427,913 | 14,197,000 | 9,186,693 | 8,884,771 | 13,182,082 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 852,000 | 791,524 | 689,941 | 957,453 | 252,500 | 1,111,819 | 1,090,119 | 606,507 |
| ஏனைய வருமானங்கள் | 125,222,477 | 34,232,828 | 38,191,183 | 60,889,306 | 114,777,933 | 95,262,346 | 134,187,365 | 86,163,590 |
| | **152,916,077** | **66,760,358** | **69,134,143** | **90,900,470** | **143,752,433** | **126,058,013** | **161,606,987** | **123,633,574** |

### 2.2.2 வாடகை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி அணையாளரின் தபபா/பபகோ/2010/01 சுற்றறிக்கையின் 05 பிரிவின் படி அனைத்து உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒருமுறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பஸ் நிலைய வர்த்தக கடைத்தொகுதியில் 31 கடையறைகளுக்கான உடன்படிக்கைகள் 9 வருடங்கள் முதல் 17 வருடங்கள் வரை காலங் கடந்திருந்தது. சுற்றறிக்கையின் 06 இன் பிரிவின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீட்டு வாடகைத் தொகை புதிய பெறுமதி மதிப்பீடு ஒன்றின் மூலம் திருத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.3 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதான செயலாளரின் CSS/9/2/5 இலக்கங் கொண்ட மற்றும் 2020 பெப்ரவரி 12 திகதிய கடித்தின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் முறையே ரூபா 21,360,332 தொகை மற்றும் ரூபா 620,620 தொகையாக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் முறையே ரூபா 59,351,931 மற்றும் ரூபா 1,069,458 எனக் காட்டப்பட்டிருந்தது. | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதான செயலாளரிடம் நிலுவைத் தொகையை பெற்றுக் கொள்வதற்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

நாகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டிற்காக சமர்பிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் விதிக்கப்பட்டிருந்த துணை விதிகளுக்கு அமைவாக தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | துணை விதிகளுக்கு அமைவாக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) 2016 – 2019 பங்குகொள்ளல் நான்கு ஆண்டுத் திட்டதின் படி தயாரிக்கப்பட்டிருந்த 2019 வருடாந்த திட்டம் நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 13 கிராம சேவகர் பிரிவுகளில் பெறுமதி கூட்டுத்தொகை ரூபா | வருடாந்த திட்டத்தின் படி நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அவ்வாறு செயற்படுவேன். |

| | | |
|---|---|---|
| 85,085,000 தொகைக்கான 82 நிர்மாண வேலைகள் செயற்படுத்துவற்கு திட்டமிடப்பட்டிருந்தது. சபையினால் திட்டத்திற்கு உரிய உடன்பட்ட கூட்டுப் பெறுமதி ரூபா 1,509,941 தொகைக்கான 03 நிர்மாண வேலைகள் மாத்திரம் செயற்படுத்தப் பட்டிருந்ததுடன், நிர்மாண வேலைகளை செயற்படுத்துவதன் முன்னேற்றம் 4 சதவீதம் ஆக காணப்பட்டது. | | |

**(ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரில் 20 திகதிய 2015/33 இலக்கங் கொண்ட மான்புமிகு ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் படி திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக தனியான அலகொன்று நிருவப்பட்டு திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக நீண்டகாலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குப்பை முகாமைத்துவத்திற்காக முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மின்சார சபையுடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருக்காத காரணத்தினால் 2012 ஆண்டு முதல் பெறவேண்டிய வீதி விளக்கு பராமரிப்புத் தொகை கிடைத்திருக்காததுடன், முன்னைய 03 வருடங்களில் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 5,365,341 தொகைக்கான பராமரிப்புச் செலவு மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு செயற்படுவேன். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் போது ஊழியர் ஒருவருக்குரிய ஓய்வூதிய நிதியத்துக்கு செலுத்த வேண்டிய ரூபா 148,760 தொகை பலவின வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. | சரியான சேமலாப ஏடுகளில் பதிவு செய்யப்பட வேண்டும். | பதிவேடுகளை சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| (i) சிரேஷ்ட மட்டத்தின் பதவி ஒன்று, மூன்றாம் மட்டத்தில் 12 பதவிகள் மற்றும் இரண்டாம் மட்டத்தின் 05 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளாக காணப்படாத போதிலும் இரண்டு உத்தியோகத்தர்கள் இதற்காக இணைக்கப்பட்டிருந்தனர். | முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைக்கு அமைவாக செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) 51 அமைய ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன், அவர்களின் சேவையை நிரந்தரப்படுத்தி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துவதற்கு அல்லது பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைக்கு அமைவாக செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) ஊழியர் கடன்**

| | | |
|---|---|---|
| இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, ஓய்வு பெற்றுள்ள மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 73 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டி இருந்த ஊழியர் கடன் ரூபா 475,450 தொகையாக காணப்பட்ட போதிலும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட ஊழியர்களின் பிணையாளர்களிடம் அறவிடப்பட வேண்டும். | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

### நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2008 ஆண்டின் களஞ்சியப் பண்டக் கணிப்பீட்டின் படி 220 பண்ட விடயங்களைச் சேர்ந்த 9,007 பண்ட அலகுகள் குறைவொன்று கண்டறியப்பட்டது. களஞ்சியப் பண்டங்கள் பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் முறைப்பிரகாரம் பதிவு செய்யப்பட்டிருக்காததுடன், பதிவீடுகள் பராமரிப்பு பலவீன நிலைமையில் காணப்பட்டது. மேலும், களஞ்சிய அலுவல்கள் தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | களஞ்சிய ஆவணங்கள் முறைப்பிரகாரம் பேணப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 விளைவற்ற / குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| குப்பைகளை துண்டுகளாக்கும் இயந்திரம் பல வருட காலம் முதல் துருப்பிடித்து காணப்பட்டதுடன், பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திருத்தி பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொடர் நடவடிக்கை எடுப்பேன். |

**3.6 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |